ARUL IAS ACADEMY

THE WAY TO YOUR DESTINY| SINCE 2014

GROUP II/II- MAINS

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு-II
(நேர்முகத் தேர்வு பதவிகள் மற்றும் நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்)
(தொகுதி-II மற்றும் தொகுதி-IIA) 2023

MAIN WRITTEN EXAMINATION FOR COMBINED CIVIL SERVICES EXAMINATION-II
(INTERVIEW POSTS AND NON-INTERVIEW POSTS)
(GROUP-II AND IIA SERVICES) 2023

# GROUP II/IIA – MAINS - MOCK TEST NO. 1

## PAPER – I

**தமிழ் / TAMIL**

**பத்தாம் வகுப்பு தரம்**

| | |
|---|---|
| **கால அளவு: மூன்று மணி நேரம்** | **மொத்த மதிப்பெண்கள்: 300** |
| **Time Allowed: Three Hours** | **Maximum Marks: 300** |

**வினாத்தாளுக்கான விதிமுறைகள்**

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும்:**

- அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.
- வினா / வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.
- விடைகள் **தமிழில் (தமிழ் எழுத்தில்)** மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.
- எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ. அதன்படி. விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும். வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி / பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

**QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS**

**Please read each of the following instructions carefully before attempting questions:**

- All questions are to be attempted.
- The number of marks carried by a question / part is indicated against it.
- Answers must be written in **TAMIL (Tamil Script)** unless otherwise directed in the question.
- Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.
- Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

**கேள்வி எண். 1:** **15 மதிப்பெண்கள்**

**கீழ்க்காணும் தலைப்புகள் தொடர்பாக ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

1. திருக்குறள் இலக்கியம் என்ற நிலையில் நின்றுவிடாமல் மனித வாழ்விற்கான விழுமியங்களைக் கூறும் பதிவுகளாக உள்ளது என்பதை விளக்குக.
2. மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம் பற்றி விளக்குக.
3. தெரிந்து செயல்வகை - ஆராய்ந்து செயலாற்றும் வகை. இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.
4. பெரியாரைத் துணைக்கோடல் - வள்ளுவர் வழிநின்று விளக்குக.
5. பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துக்களைக் கூறுக.

**கேள்வி எண். 2:**

**பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும், சரியாகவும், சுருக்கமாகவும் விடை எழுதுக.**

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று வருந்தியபோது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர்தான் நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்று தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ. ('வைத்தமாநிதி முடும்பை 'கோதைநாயகி அம்மாள்) ஆவார்.

இவர் 'ஜகன் மோகினி' என்ற இதழை முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். பெண் எழுத்தாளர்களையும், வாசகர் வட்டத்தையும் உருவாக்கினார். காந்தியத்தின் மீது பற்றும் உறுதியும் கொண்டிருந்த இவர் தம் எழுத்துகளால் மட்டுமின்றி மேடைப் பேச்சின் மூலமும் காந்தியக் கொள்கைகளைப் பரப்புரை செய்ததோடு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைக்கும் சென்றார். தமிழகப் பெண் வரலாற்றில் தனித்து அடையாளம் காட்டப்பட வேண்டிய சிறப்புக்குரியவரான வை.மு.கோ அவர்கள் 115 நாவல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'குடும்பமே உலகம்' என்று பெண்கள் வாழ்ந்த காலகட்டத்தில், வீட்டிற்கு வெளியே உலகம் உண்டு என்பதைப் பெண்களுக்குத் தன் வாழ்வின் மூலம் இனம் காட்டிய பெருமைக்கு உரியவர் வை.மு.கோ.

**அம்மையார். அவருடைய எழுத்தாற்றலுக்கொரு சான்று:**

என்ன வேடிக்கை! அடிக்கடி பாட்டி 'உலகானுபவம்...' உலகம் பலவித... என்றெல்லாம் சொன்னதைக் கேட்டபோது எனக்கு ஒண்ணுமே புரியாது விழித்தேனே, பாட்டி சொல்லிய வசனங்களை விடக் கடிதங்கள் பலவற்றைப் படித்தால் அதுவே மகத்தான லோகானுபவங்களை உண்டாக்கிவிடும் போலிருக்கிறதே பாவம்! பேசுவது போலவே தன்னுடைய மனத்தினுள்ளதைக் கொட்டி அளந்துவிட்டாள். நான் கிராமத்தை வெறுத்துச் சண்டையிட்டு வீணாக அவர் மனதை நோவடிக்கிறேன். இவள் பட்டணத்தை வெறுத்துத் தன் கொச்சை பாஷையில் அதன் உண்மை ஸ்வரூபத்தை படம் பிடித்துக் காட்டி விட்டாளே.. என்ன உலக விசித்திரம்... என்று கட்டுமீறிய வியப்பில் சித்ரா மூழ்கினாள்." (தபால் வினோதம்' குறுநாவலில் இருந்து)

**கேள்விகள்:** **5x2 = 10 மதிப்பெண்கள்**

1. வை.மு. கோதை நாயகி அவர்களின் படைப்பாற்றலை ஊக்குவித்தவர்கள் யாவர்? எவ்வாறு ஊக்குவித்தனர்?
2. வை.மு. கோதை நாயகி தம் சமகால எழுத்தாளர்களால் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
3. 'ஜகன் மோகினி' இதழ் குறித்து எழுதுக.
4. வை.மு.கோதை நாயகி அவர்களின் விடுதலைப் போராட்டம் குறித்து எழுதுக.
5. வை.மு.கோதை நாயகியின் படைப்பில் உள்ள கீழ்க்கண்ட சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை எழுதுக. - லோகானுபவங்கள், பாஷை, ஸ்வரூபம், விசித்திரம்.

**கேள்வி எண். 3:** **10 மதிப்பெண்கள்**

**கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை.**

தற்போது தென்கோடித் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இடப்பெயர்கள் சிந்துவெளி நாகரிகம் தோன்றி வளர்ந்து பகுதியிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டில் ஆரணி,

கொற்கை, மைலம், மானூர், நாகல், தொண்டி, கண்டிகை போன்ற இடப்பெயர்கள் தற்போதைய பாகிஸ்தானிலும் (பண்டைய சிந்துவெளிப் பகுதி) வழக்கத்தில் உள்ளன.

அதேபோல் தமிழ்நாட்டிலுள் ஆலூர், ஆசூர்,படூர்,இஞ்சூர், குந்தா,நாகல்,தானூர், செஞ்சி போன்ற இடப்பெயர்கள் தற்போதைய ஆப்கானிஸ்தானில் உள்ளன. திராவிடர்கள் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான் போன்ற பகுதிகளில் வாழ்ந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

பலுசிஸ்தானில் பிராகுயி என்ற திராவிட மொழி இன்றுவரை பேசப்பட்டு வருகிறது. தமிழ் பிராமி, வட்டெழுத்து மற்றும் வரிவடிவங்களில் பொறிக்கப்பட்டுள்ள தொடக்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்படும் பல இடப்பெயர்கள் இன்றைய பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற வடமேற்கு நிலப்பகுதிகளில் நிலைத்திருப்பது வியப்புக்குரியது. சிந்துவெளி நாகரிகத்தை விரிவாக ஆய்வு செய்த சர் ஜான் மார்ஷல் ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள் இந்தியாவின் பிற பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததை உறுதிப்படுத்தியுள்ளார்.

திராவிடர்கள், மத்தியத்தரைக்கடல் இனத்தினர், முந்தைய ஆஸ்ட்ரோலாய்டுகள், ஆல்பைன்கள் மற்றும் மங்கோலியர்கள் போன்றோர்சிந்துவெளிப்பகுதியில் வாழ்ந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனாலும், இந்நாகரிகத்தை தோற்றுவித்த பெருமக்கள் யார் என்பது இன்னும் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. இவர்கள் திராவிடர்களாகத் தான் இருக்க வேண்டும் என்பது சர் ஜான் மார்ஷல், ஆர்.டி. பானர்ஜி, ஹீராஸ் பாதிரியார் போன்றோர்களின் கருத்தாகும். மேலும், சிந்துவெளியில் பேசப்பட்டு வந்த மொழி, பண்டைய தமிழ்மொழியே என்பதும் அவர்களது கருத்தாகும்.

பண்டைய காலத்தில், தமிழ்நாட்டுக்கு வந்த யவனர்கள் (கிரேக்கர்கள்), இந்நாட்டைத் 'திரிமிளிகே' என்று அழைத்தனர். காஞ்சியை ஆட்சி செய்த நந்திவர்ம பல்லவன் தமிழ் அரசர்களை 'திராவிட மன்னர்கள்' என்றே குறிப்பிட்டுள்ளார். கங்காதேவி என்பவர் தாம் எழுதிய 'மதுரா விஜயம்' என்ற நூலில் தமிழ்நாட்டைத் 'திராவிட தேசம்' என்றும், தமிழ் மன்னர்களை 'திரமிள ராஜாக்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார். பழங்காலந்தொட்டே "தமிழ்' என்ற சொல்லைப் பிற மொழியினர் திரமிளா, திராவிட, திராவிடா என்ற சொற்களால் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

சிந்துவெளி நாகரிகத் தொல்பொருள் ஆய்வை மேலும் விரிவுபடுத்தி அறிவியல் முறைகளையும், தொழில்நுட்பங்களையும் கையாண்ட பிரிட்டானியத் தொல்லியல் அறிஞரான சர். மார்டிமர் வீலர் (Sir Mortimer Wheeler) அது 'நகர நாகரிகம்' என்பதை உறுதி செய்தார். இது ஆரியர்கள் வருகைக்கு முன்பாகவே வளர்ந்து உச்ச நிலையில் இருந்தது. ஆரியர் இந்தியாவுக்கு வந்தபோது திராவிடர்கள் சுமேரியா, பாபிலோனியா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். திராவிடர்களே கலை நயத்திற்கும், பண்பட்ட வாழ்க்கைக்கும் பழக்கப்பட்டிருந்தனர். ஆகவே, சிந்துவெளி நாகரிகமானது. ஆரிய நாகரிகத்திற்கு முன்பே வளர்ச்சி அடைந்த ஒரு நகர நாகரிகமாகத் திகழ்ந்தது.

**கேள்வி எண். 4:** **10 மதிப்பெண்கள்**

**பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்குமிகாமல்)**

தேர்த் திருவிழா - பத்து நாள்கள் - முதன்மைத் தெய்வங்கள் - சிறு தெய்வங்கள் - வடம் பிடித்தல் - பக்தனை நாடி இறைவன் இறைவி வருகை புரிவது - திருவாரூர் தேர் - ஆசியாவில் மிக உயர்ந்தது - வேளாங்கண்ணி தேர்த் திருவிழா - தேர் நடமாடும் கலைக்கருவூலம் - தமிழகத்தில் தேர்த்திருவிழா நடைபெறும் இடங்கள்

**கேள்வி எண். 5:** **10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதுக.**

போர்க்களத்திலும் ஆநிரை கவரும் சண்டைகளிலும் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன. முல்லை நில வாழ்க்கையில் மக்களின் சிறப்பான செல்வ வளமாகக் கால்நடைகள் (ஆநிரைகள்) இருந்தன. அருகருகே வாழ்ந்த இனக்குழுவினர் மற்ற குழுவினரின் கால்நடைகளைக் கவர்ந்து தமதாக்கிக் கொள்வதற்காகச் சண்டையிட்டுள்ளனர். முல்லைநில மக்களின் தலைவன் எதிரிகளை எதிர்த்துப் போரிட்டுக் கால்நடைகளைக் கவர்ந்து வருவதுண்டு. இதை எதிர்த்து போரிடுபவரும் உண்டு. அப்போது இறந்துவிடும் வீரர்களைத் தியாகிகளாகப் போற்றி அவர்களின் நினைவாக நடுகற்களை நிறுவினர். போர்க்களக் காட்சிகளையும், நடுகற்களைக் குறித்தும், அவற்றை வழிபட்ட முறைகளைக் குறித்தும் சங்க இலக்கியங்களில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நடுகற்கள் நடப்படுவதற்கான வழிமுறைகள் குறித்து தொல்காப்பியம் விரிவாக எடுத்துரைக்கிறது.

தேனி மாவட்டத்தின் புலிமான்கோம்பை, தாதப்பட்டி ஆகிய இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் பொற்பனக்கொட்டை என்ற இடத்திலும் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட சங்க கால நடுகற்கள் காணப்படுகின்றன. சங்ககாலத்தைச் சார்ந்த நடுகற்களில் உருவம் அல்லது சிலைகள் காணப்படவில்லை.

சங்க காலத்திற்குப் பிறகும், பல்லவர் காலத்திலும் நடப்பட்ட நடுகற்கள் முல்லை நிலப்பகுதிகளில் பெரிதும் காணப்படுகின்றன. குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் என்ற ஊரினைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவலாக இத்தகைய நடுகற்களைக் காணலாம். யாருடைய நினைவாக அந்த நடுகற்கள் நடப்பட்டனவோ, அந்த வீரர்களின் பெயர்களின் பொறிக்கப்பட்டு வீரர் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

**கேள்வி எண். 6:** **10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க**

Archaeological excavation refers to systematically digging a site to recover material evidence for exploring and interpreting life-styles of various societies of the past.

Archaeological excavations at the early historic sites are the source of evidence of the activities of the Sangam Age people. Excavations at Arikkamedu, Azhagankulam, Uraiyur, Kanchipuram, Kaveripoompattinam, Korkai, Vasavasamudram, Keezhadi, Kodumanal in Tamil Nadu, and Pattanam in Kerala provide the evidence we have of this period.

Arikkamedu, near Puducherry, is a Sangam Age port, excavated by the Archaeological Survey of India (ASI). British archaeologist, Robert Eric Mortimer Wheeler, French Archaeologist, J.M. Casal, and Indian archaeologists, A. Ghosh and Krishna Deva. excavated this site. They found evidence of a planned town, warehouse, streets, tanks and ring wells.

The Archaeological Survey of India (ASI) is a Central government agency that manages archaeological sites and monuments in India. The Government of Tamil Nadu has its own department for archaeology called the Tamil Nadu State Department of Archaeology. The Indian Treasure Trove Act (1878), the Antiquities and Art Treasures Act (1972), the Ancient Monuments and Archaeological Sites and Remains Act (1958) are legislations related to the preservation of archaeological remains in India.

**கேள்வி எண். 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக்கடிதம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக் கருவிகள் வழங்குதல் தொடர்பாக அரசு முதன்மைச் செயலாளர் வெளியிடும் ஆணைக் கடிதம்

**கேள்வி எண். 8:** **20 மதிப்பெண்கள்**

**(அ) கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. செல்வம் 2. பண்பாடு 3. மாநிலம் 4. கடல்

**(ஆ) பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க.**

1. பேணம் - பேனம்
2. சலம் - சளம்
3. சாலை - சாளை
4. சுழித்தல் - சுளித்தல்

**(இ) பிரித்தெழுதுக**

1. புகுந்தீங்கு 2. புத்துயிர் 3. புவன நாயகன் 4. புள்ளுறு

**(ஈ) எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

1. அமைச்சரால் விருது வழங்கப்பட்டது
2. மக்கள் காந்தியடிகளைப் போற்றினர்
3. நான் பாடல் பாடினேன்
4. சிலை சிறப்பியால் செதுக்கப்பட்டது

**(உ) பிழை நீக்கி எழுதுக**

1. சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அல்ல.
2. தலைவி தலைவனோடு சென்றார்
3. இதனைச் செய்தவர் இவரல்லவா?
4. பெரியதும் சிறியதுமான சாமான்களைச் செய்கிறார்கள்.